கனத்திற்குரிய பாத்திரம்
(கூடார எதிரொலி)

தேவன் அருளிய பரிசுத்த வேதாகமத்தில் பல்வேறு பாத்திரங்
ப்பற்றி பல இடங்களில் கூறப்பட்டுள்ளன. எல்லாவற்றையுமே இன்
ய தினம் நாம் தியானிக்க நேரமும், காலமும் போதாது. ஆனால்
மோத்தேயு 2:21ல் ஒருவன் தேவனுடைய வீட்டில் கனமுள்ள பாத்
மாய் காணப்படவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. விசுவாசிகளாகிய
ம் கனவீனமான, அசட்டைக்குரிய, அசுத்தமான பாத்திரமாயல்ல,
முள்ள, எஜமானனுக்கு உபயோகமான, பரிசுத்தமான, ஆயத்தமாக்
பட்ட பாத்திரமாய் காணப்படுதலே மேலானது. ஓர் தேவனுடைய
னை எப்படிப்பட்ட பாத்திரமாயும் இருக்கலாம் என எண்ணுதல் தவ
து. அவன் கனத்திற்குரிய பாத்திரமாய் இருத்தல் அவசியம். ஏனெ
ல் சர்வ சிருஷ்டியும் ஜீவராசியும் ஆண்டவருடைய வாயினால் உண்
க்கப்பட்டிருக்கையில், மனிதனையோ தம்முடைய கையினால் உண்டாக்கி,
னுள் ஜீவசுவாசத்தை அவர் ஊதினார். ஆகவே அவன் மற்ற எல்லா
ஷ்டிகளிலும் மேலானவன். அப்படிப்பட்ட மனிதன் அநேக நேரங்
ல் கனவீனமான பாத்திரமாய் மாறிவிடுகிறான். ஆகவே நமக்கு ஆவிக்
ய ஜீவியத்தில் சில பாடங்களைக் கற்றுக்கொடுக்கும் பாத்திரங்களை
சத்திலிருந்தே இன்று நாம் காண்போமாக. வசனத்தை எழுதும்படி
ய் உதவிசெய்த பரிசுத்த ஆவியானவர்தாமே வசனங்களை நமக்கு
கி நம்மில் கிரியைசெய்து மாற்றத்தை உண்டாக்குவாராக.

கெட்டுப்போன பாத்திரம் எரேமியா 18:4

குயவன் ஒருவன் மிகுந்த வாஞ்சையோடும், பாரத்தோடும் ஓர்
மையான பாத்திரமொன்றை உருவாக்க எண்ணினவனாய், மண்ணை
யில் எடுத்து, அதைப் பிசைந்து திரிகையிலேவைத்து பாத்திரமொன்றை
வாக்கி வரும் வேளையில் அது கெட்டுப்போயிற்று. பின்னர் அவன்
த கெட்டுப்போன பாத்திரத்தை மாற்றிவிட்டு, வேறொரு பாத்திரத்தை
த மண்ணினால் உருவாக்குகிறான். இதை எரேமியா தீர்க்கதரிசி
த்துக்கொண்டு இருக்கிறார். குயவனுடைய நோக்கமெல்லாம், கெட்
போன பாத்திரத்தை உருவாக்கவேண்டுமென்பதல்ல நல்ல ஓர் அரு
யான, கனமுள்ள பாத்திரத்தை உருவாக்கவே விரும்பினவனாய் அவன்
ர் தொழிலை ஆரம்பித்தான். ஆனால் குயவனுடைய கையிலுள்ள களி
ணே குயவன் விரும்புகிறபடி, அவன் வனையும்வேளையில் அவனுடைய
யின் செய்கைகளுக்கு ஒப்புக்கொடாததால் குயவன் விரும்பிய பாத்தி
தை உருவாக்கிட இயலவில்லை. குயவனுடைய கையிலே மண் இருந்த

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* **இலவசமாக (மத்தேயு 10:8)** உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely **free of cost (Matt 10:8)** forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

போதிலும் அவன் வாஞ்சைக்கும், தாகத்திற்கும், தகுதியற்ற மண்ணும் பக்குவப்படாத மண்ணும், குயவனின் இஷ்டத்திற்குக் கீழ்ப்படியாமல் போகவே, அவன் எவ்வளவோ முயற்சித்தும் அந்தப் பாத்திரம் அவன் விருப்பத்திற்கு மாருக கெட்டுப்போகிறது.

இன்றைக்கும் ஆண்டவர் விலேயேறப்பெற்ற, கனமான, மகிமையுள்ள மகத்தான பாத்திரங்களேயே உருவாக்க வாஞ்சையுள்ள குயவனுக காணப்படுகிரு்ர். ஆனால் மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட மண்ணை தனே தன்னை தசதிப்படுத்தி, தன்னை அவருடைய இஷ்டத்திற்கு ஒப்புக் கொடுத்து, கீழ்ப்படியாத காரணத்தால் இன்னும் கெட்டுப்போன பாத்திரங்களாய் காணப்படுகின்றனர். மேலும் தாங்கள் கெட்டுப்போனதற்கு குயவனுகிய கர்த்தரையே காரணம் கூறிவிடுகின்றனர். அன்பான நண்பரே இன்று நீவிர் எப்படிப்பட்ட பாத்திரமாய் இருக்கின்றீர்? தேவனுகிய கர்த்தர் உம்மை கனமான, மகிமையான பாத்திரமாய் உருவாக்க சித்தம்கொண்டிருக்க நீரோ தேவனைக் குறைகூறிக்கொண்டல்லவா இருக்கின்றீர். காரணம தேவன் அல்ல. உம்முடைய பக்குவப்படாத தன்மையும், கீழ்ப்படியாமையும், ஜென்ம சுபாவமுமேயாம். தேவன் ஒருநாளும் தம் பிள்ளைகளைக் கெடுத்துப்போடுகிறவரல்ல. நீவிர் தீமையினின்று காக்கப்படும்படியாகவே இயேசு பிதாவை நோக்கி ஜெபித்தார் (யோவா. 7:15). தேவனைப் பற்றிக்கொண்டிருக்க மனதில்லாததால் அநியாயத்தால், வேசித்தனத்தால். துரோகம், பொருளாசை, குரோதம், பொருமை, கொலை, வாக்குவாதம், வஞ்சகம், வன்மம், புறங்கூறுதல், அவதூறுபண்ணுதல் அகந்தை பொல்லாதவைகளை யோசித்துப் பிணைத்தல் இதுபோன்ற காரியங்களை (ரோமர் 1:28-31) தேவனுடைய கையில் ஒப்புக்கொடாமல் உனக்குள்ளேயே வைத்திருக்கும்போது உன்னை எங்கனம் ஓர் கனமான பாத்திரமாய் தேவன் உருவாக்க இயலும். எனவே நீ தேவனுக்கு உன்னை ஒப்புக்கொடாததாலேயே நீ கெட்டுப்போன பாத்திரமாய், தேவனுடைய அன்புக்கும், கிருபைக்கும், ஆசீர்வாதத்திற்கும் தகுதியற்ற பாத்திரமாய் உள்ளாய்.

ஆகிலும் நண்பரே! உமக்கு ஓர் நம்பிக்கை, தருணம் உண்டு. எவ்விதமாய் கெட்டுப்போன பாத்திரத்தை மாற்றிவிட்டு வேருெரு பாத்திரத்தை அதே மண்ணினல் குயவன் உருவாக்கியதை எரேமியா தீர்க்கதரிசி கண்டானே அதேபோல் கெட்டுப்போன உன் வாழ்க்கையை, இருதயத்தை மாற்றி ஓர் புதிய பாத்திரமாய் உருவாக்க இயேசு வல்லவராயிருக்கிரு்ர். ஏனெனில் ஒருவரும் கெட்டுப்போவது அவருக்குச் சித்தமில்லை என மத்தேயு 18.14-ல் காண்கிரு்ேம். நீவிர் கெட்டு அழிந்து போவதை இயேசு விரும்பாமல், நீவிர் கனமுள்ள, பயனுள்ள, பரிசுத்தமாக்கப்பட்ட பாத்திரமாய் காணப்பட இயேசு விரும்புகிரு்ர். ஆகவே உன்னுடைய

ன்ம சுபாவத்தையும், பக்குவப்படாத தன்மையையும், கீழ்படியாமை யும் உணர்ந்து, உன்னைத் தகுதிப்படுத்தி, அவருடைய சித்தத்திற்கு புக்கொடுத்து அவருடைய பலத்த கரத்திற்குள் அடங்கியிரு. அவர் ன்னை உயர்த்துவார். உன்னை விலையேறப்பெற்ற கனமான பாத்திர ய் மாற்றுவார். கெட்டுப்போனதை இரட்சிக்க வந்த இயேசு உன்னை இரட்சிப்பார். உன்னை தம் மகிமையின் சாயலாய் மாற்றுவார்.

சாவு இருக்கின்ற பாத்திரம்: 2 இராஜாக்கள் 4:40.

எலிசா தீர்க்கதரிசி தன்னுடைய வேலைக்காரனை நோக்கி தீர்க்க ிகளின் புத்திரருக்கு கூழ் காய்ச்சும்படி கட்டளையிட்டான். வேலைக் ரனே கூழ் காய்ச்சும்படியாய் கீரைகளைப் பறிக்க வெளியேபோய், ஒரு ய கொம்மட்டிக் கொடியைக் கண்டு அதன் காய்களை மடி நிறைய றுத்துவந்து, அவைகளை அரிந்து கூழ்பானையிலே போட்டான். அது னதென்று அவர்களுக்கு தெரியாதிருந்தது. சாப்பிட ஜனங்களுக்கு தை வார்த்தார்கள். அவர்கள் அந்த கூழில் எடுத்துச் சாப்பிடுகிற து சாப்பிடக்கூடாமல், "தேவனுடைய மனுஷனே," பானையில் சாவு ருக்கிறது என்று சத்தமிட்டார்கள். 2 இரா. 4:38-40.

இன்றைக்கு அநேக விசுவாசிகள், தேவனுடைய பிள்ளைகள் ஆகி ரின் நிலை அதுவாகத்தான் உள்ளது. கீரையைப் பறிக்கப்போன மனி ின் கண்ணை கொம்மட்டிக்காய் கவர்ந்ததுபோல, இன்றும் அனேக சின் காரியங்கள் தேவனுக்காய் ஜீவிக்க தீர்மானித்த தேவனுடைய ள்ளைகளையும் கவர்ந்துகொண்டு இருக்கின்றன. கொம்மட்டிக்காயின் ன்மையை அறியாத மனுஷன் எவ்விதம் அதை மடி நிறைய அறுத்தானே ப்படியே பிசாசின் ஆசீர்வாதத்தால், உலகத்தின் கவர்ச்சியால், உலக நேகத்தால் வரும் தீமை என்ன என்பதை உணராமல் அதையே ரும்பி மடிநிறைய அறுக்கிறார்கள். முடிவு கொம்மட்டிக்காயைச் சாப்பிடப் ாகும்போதுதான் தெரியவந்தது. "பானையிலே சாவு இருக்கிறது என த்துகிற அனுபவம்.

கூழ் காய்ச்சுவதும், கீரையைப் பறிக்கச்சென்றதும் தவறல்ல, நல்ல ியமே. ஆனால் கொம்மட்டிக்காயைக்கண்டு கவர்ச்சிக்கப்பட்டு, அதை நிறைய அறுத்ததாலேயே சாவு வீட்டிற்குள் இருக்கும் பானையில் வந் து. அனேக விசுவாசிகள், தேவபிள்ளைகள், ஊழியர்களின் நிலமை இவ்வித கவே உள்ளது. ஆரம்பத்தில் பரிசுத்தமும், உண்மையும், கர்த்தருக்குப் ப்படும் பயமும், தேவசித்தம் செய்தலும் அவர்களது ஜீவியத்தில் ணப்பட்டது. எந்த காரியத்திலேயும் கர்த்தருக்கே முதலிடம் கொடுத்து த்தனர். ஆனால் நாளடைவில் உலக நன்மை, பட்டம், பணம், மணம், வேலை இப்படிப்பட்ட காரியங்களுக்காய் உலகத்தின் பேச்சில்,

உலக காரியங்களின் கவர்ச்சியில் பலியாகி தங்களை முழுவதுமாய் ஒப்பு
கொடுத்தபடியால் இன்று தங்கள் குடும்பங்களில் அலறுகின்ற கண
நிலமைக்கு வந்துள்ளனர். பரிதாபம். விசுவாசியே, உலகத்தில் உ
எந்த விஷமான (கொடுமையான) கொம்மட்டிக்காய்க்கும் அலங்காரமா
பெயரும், கவர்ச்சியான அலங்காரத்தையும் பிசாசு கொடுத்துள்ளா
சாராயம் உயிரைக் குடிக்கக்கூடியது. ஆனால் அதற்கு கவர்ச்சியா
லேபிளும், பாட்டிலும் விளம்பரமும் உள்ளது. ஆம்! இதுவே உலக
இதுவே பிசாசின் வேலை. எப்படியாவது வயிறு நிறைந்தால் போது
என எண்ணி வேலைக்காரன் கொம்மட்டிக்காயை அறுத்தானே, அதேபோ
எப்படியாவது வேலை கிடைத்தால் போதும், மகளின் திருமணம் நட
தால் போதும், பதவி உயர்வுபெற்றால்போதும் என்று எண்ணி கவர்
யான, எளிதில் கிடைக்கக்கூடிய கொம்மட்டிக்காய்களை தொடர்ந்து ம
நிறைய அறுத்தால் முடிவில் அலறுவாய்.

தேவபிள்ளையே! இன்று உன்னுடைய அனுபவம் என்ன? எ
ஆண்டவருக்காய் ஜீவிப்பேன், அவர் வார்த்தையின்படியே நடப்பேன்
அவர் கொடுப்பது எனக்குப்போதும் என்று புறப்பட்ட உன்னுடைய நி
என்ன? மெய்யாய் நீ ஆண்டவருக்காய் மட்டுமா ஜீவிக்கிறாய்? கர்த்த
டைய வார்த்தையின்படிதான் நடக்கிறாயா? கர்த்தர் கொடுப்பதுபோது
என்று திருப்திபடுகின்றாயா? அல்லாவிட்டால் கொம்மட்டிக்காயின் கவ
சிக்கு அடிமையாகி அதையே தேடி அலைந்து அடிமையாகி விட்டாய
கொம்மட்டிக்காய் பார்க்க அழகாயிருக்கலாம், பெரிதாகவும் இருக்கலா
மேலானதாயும், எளிதில் கண்ணுக்கு தெரியக்கூடியதாயும் இருக்கலா
மயங்கி விடாதே. மயங்கின மனிதன் சாவை சந்தித்து அலறின
விசுவாசியே, நீயும், வீட்டாரும் அலறுவதற்கு முன்பே, கஷ்டத்தை
வேதனையையும் சந்திப்பதற்கு முன்னதாக இன்றே உன்னை சரிசெய்
கொள். உன் ஆசை இச்சைகளை, உலக சிநேகம் தேவனுக்கு விரோ
மான பகையென அறிந்து விட்டுவிடு, தேவனுக்குச் சித்தமில்லா ஒன்
எனக்குத் தேவையில்லை என்று தீர்மானித்து தெளிந்த புத்தியுடன் நட
பாயாக. தேவனுடைய மனுஷனாகிய எலிசா எவ்விதமாய் பானையில் உ
சாவை நீக்கி ஆசீர்வாதத்தைக் கட்டளையிட்டாரோ அதேபோல் தேவ
உன்மேல் வரவேண்டிய சாபத்தை நீக்கி உன்னை ஆசீர்வாதமான ப
திரமாய் மாற்றுவார்.

III. எண்ணெயுள்ள பாத்திரம்: II இராஜாக்கள் 4:2

தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாக இருந்த
ஸ்திரி எலிசா தீர்க்கதரிசியிடம் தன் வீட்டு நிலமைகளையும், கடனை
யும் வேதனையுடன் புலம்பும்வேளையில் எலிசா அந்த ஸ்திரியிடம், "

...க்கு என்ன செய்யவேண்டும்? உன்னிடத்தில் என்ன இருக்கிறது ...ல்'' என்று கேட்டான். அந்த ஸ்திரியோ தன்னிடம் ஒரு குடம் ...ணெய் அல்லாமல் வேறொன்றும் இல்லையென்று கூறும்போது,'' எலிசா ...ளிடம் அயல்வீட்டுக்காரர் எல்லோரிடமும் அநேகம் வெறும் பாத்தி ...ளைக் கேட்டுவாங்கி உள்ளே போய் உன் பிள்ளைகளுடன் நின்று கத ...ப்பூட்டி அந்த பாத்திரங்கள் வார்த்து நிறைந்ததை விற்று, உன் கட ...த் தீர்த்து மீந்ததைக் கொண்டு நீயும், உன் பிள்ளைகளும் ஜீவனம் ...ணுங்கள் என்று கூறினான் என II இராஜா. 4·1-7 ல் வாசிக்கிறோம்.

கர்த்தருக்குப் பயந்து நடந்தவன் என்று தீர்க்கதரிசியின் புத்திரனு ... தன் புருஷனைப்பற்றிக் கூறும் அந்த ஸ்திரீ எவ்விதம் தன்னுடைய ...ழ்க்கையில் இரண்டு பிள்ளைகளை வைத்துக்கொண்டு கடனோடு கஷ்டப் ...வதாய் கூறினாளோ அதேபோன்று இன்றைக்கும் இரட்சிக்கப்பட்டு. ...ஸ்நானம் பெற்று. கர்த்தருடைய எண்ணெயாகிய பரிசுத்த ஆவி ...ல் நிரப்பப்பட்ட தேவனுடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் வறுமை, ...ன தொல்லைகள் காணப்படுவதாய் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள் ...வனுடைய மனுஷனாகிய எலிசாவை அவள் சந்தித்தாள். அவளது ... நீங்கிற்று தீர்க்கதரிசியாகிய எலிசா விதவையான அந்த ஸ்திரீ ...ன் வீட்டிற்கு சென்றதாகவோ, நீண்ட ஜெபம் செய்ததாகவோ, அற் ... செய்ததாகவோ வேதம் கூறவில்லை. தேவனுடைய மனுஷன் ...ன்ன ஆலோசனையின்படி அவள் நடந்தாள், அவள் வறுமை நீங்கிற்று

அந்த ஸ்திரியும் பெரிதான காரியத்தை ஒன்றும் செய்துவிடவில்லை. ...ளிடம் உள்ள ஒரு குடம் எண்ணெயை தன் பிள்ளைகளோடு கதவைப் ...டி, வெறுமையான பாத்திரங்களில் வார்த்தபோது பாத்திரம் அனைத் ...ம் நிரம்பிற்று. அவளது வறுமை நீங்க உதவியது அவளிடமிருந்த எண் ...ணெயே. தன்னிடம் உள்ள எண்ணெயின் மகத்துவத்தை அவள் அறியா ...ருந்தால் வறுமையும் கடனும் அவளுடன் இருந்தது. அதேபோன்று ...களுக்குள் இருக்கும் தேவ வல்லமையை, பரிசுத்த ஆவியானவரின் ...த்துவத்தை, வரங்களின் மேன்மையை அநேகர் உணராது அப்படியே ...டக்கிவைத்துக்கொண்டு இருப்பதால் அவர்கள் வாழ்வில் தொடர்ந்து ...றுமையும் கடனும் உள்ளது. தன்னிடமுள்ள கொஞ்ச எண்ணெயை ...ப்போது அவள் பயன்படுத்தத் துவங்கினாளோ அப்போதே ஆசீர்வாதம் ...ழிந்தோட ஆரம்பித்தது. அன்பான விசுவாசியே உன்னுடைய வாழ்க் ...கையில் உள்ள குறைவுகள் ஏன் இன்னும் நீங்கவில்லையென்றால் உன்னி ...முள்ள காரியத்தை நீ இன்னமும் உபயோகிக்காததே. தன்னுடைய வறு ...மையையும் கடனையும் நீக்கக்கூடிய வல்லமையுள்ள எண்ணெய் வீட்டில் ...ருந்தும் அதை அறியாமல் அற்பமாய் எண்ணினபடியினாலேயே அவள் ...தொடர்ந்து வறுமையில் இருந்தாள்.

அநேக விசுவாசிகள், தேவபிள்ளைகள் எல்லாத் தேவைகளையும் பிரச்சனைகளையும் நீக்கக்கூடிய பரிசுத்த ஆவியானவரை தங்களுக்குள் கிரியை செய்ய விடாமல் அப்படியே அடக்கி, அமுக்கி விடுகின்றனர். நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் அதிகமாய் கிரியை செய்ய அவர் வல்லவரென்பது (எபே. 3:20) உண்மையே. ஆனால் அவர் எப்போது அங்கனம் கிரியை செய்வாரென்றால் நமக்குள்ளே கிரியை செய்யும் வல்லமையின்படி (எபே. 3:20)தான் நமக்குச் செய்ய அவரால் இயலும். ஆகவே ஆவியை அவித்துப்போடாமல் பெற்றிருக்கிற, உனக்குள் இருக்கும் கொஞ்ச காரியத்தைவைத்து கிரியைசெய்வாயாக. தேவபிள்ளையே! உன் குறை நீங்கவும், உன் வறுமை உன்னைவிட்டு ஓடவும் தேவனுடைய ஆலோசனைக்குக் கிழ்ப்படி உன்னிடத்தில் எது இல்லையென்பது இங்கு பிரச்சனையல்ல, எது இருககிறதோ அதை நீ பிரயோஜனப்படுத்த வேண்டும். தேவன் உனக்கு எதை கொடுத்து இருக்கிறாரோ, எந்த கிருபையை, எந்த தாலந்தைக் கொடுத்திருக்கிறாரோ அதை நீ பிரயோஜனப்படுத்தவேண்டும். சின்னதா பெரியதா என்பது பிரச்சனையல்ல. கொடுக்கப்பட்டது எதுவோ அதை அறைவீட்டில் ஒருமனதுடன் ஜெபத்தோடு, விசுவாசத்தோடு பிரயோஜனப்படுத்து. அப்போது உன்னிடத்தில் உள்ள அற்பமாய் எண்ணப்பட்ட தாலந்தில் ஆண்டவருடைய கிருபையாலே நிறைவான ஆசீர்வாதத்தைக் காண இயலும். இனியும் இல்லை இல்லையென்று சொல்லிக்கொண்டிராமல் இருப்பதை உன் முழு பலத்துடன் பயன்படுத்து. தேவனுடைய ஆசீர்வாத நிறைவை உன்னில் காண்பாய்.

IV. பொற்பாத்திரம் : எபிரேயர் 9:4

ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள உடன்படிக்கை பெட்டியில் மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம் இருந்தது. மகா பரிசுத்த ஸ்தலம் என்பது தேவன் தம்முடைய மகிமையிலே வாசம் பண்ணும் மகிமையின் ஸ்தலமாகும். இந்த மகிமையின் ஸ்தலத்திலே தேவ சமூகத்தில் காணப்படும் பாத்திரமே இந்த மன்னாவுள்ள பொற்பாத்திரம். தேவனாகிய கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் இவ்வித மகிமையின் பொற்பாத்திரமாகவே காணப்பட விரும்புகிறார். தேவனுடைய பிள்ளைகள் கர்த்தரின் மகிமையின் ஸ்தலத்திலே, பரலோகத்திலே சேர வேண்டுமாயின் கண்டிப்பாய் அவர்கள் மகிமையின் பாத்திரமாய் மாற்றப்பட வேண்டும்.

எல்லா பாத்திரங்களும் அவருடைய மகிமையின் பிரசன்னத்திற்குள் செல்லுதல் இயலாது எவ்விதமாய் பொற்பாத்திரத்துள், மகிமையின் பாத்திரத்திற்குள் மன்னா இருந்ததோ அதேபோல் மகிமையின் பாத்திரங்களாகிய பொற்பாத்திரமாய் மாற நமக்குள் தேவனுடைய வசனமாகிய மன்னா இருக்க வேண்டியதவசியம். வசனம் நமக்குள் இருக்க வேண்டுமென்

றுமிடத்து தேவனுடைய வசனம் நிலைத்திருந்து வசனத்திற்கொத்த ஜீவியம் செய்வதேயாகும். அநேக கிறிஸ்தவர்கள் தேவனுடைய வசனத்திற்கு மதிப்பையும் கனத்தையும் கொடுப்பதில்லை. வசனத்தை, தேவனுடைய வார்த்தையை அசட்டை செய்யும் கிறிஸ்தவர்கள் இந்நாட்களில் பெருகியிருக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தையை நீ அசட்டை செய்வாயானால் அது கர்த்தரை அசட்டை செய்வதற்கு ஒப்பாகும். நீ அவருடைய வார்த்தைகளை கைக்கொண்டு அவரைக் கனப்படுத்தினால் அவரும் உன்னை கனப்படுத்துவார். என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள் என்றல்லவா (1 சாமு 2:30) கர்த்தர் கூறுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி, 'உம்முடைய வார்த்தைகள் எனக்குக் கிடைத்த உடனே அவைகளை உட்கொண்டேன். உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்திற்கு மகிழ்ச்சியுமாயிருந்தது' என்று (எரே 15:16) கூறுகிறார். இன்று வேதத்தில் எத்தனை அதிகாரங்களை வாசித்தீர்கள் என்று கிறிஸ்தவர்களிடம் கேட்பதற்குப் பதிலாக இன்று வேதம் வாசித்தீர்களா என்றல்லவா கேட்க வேண்டியதுள்ளது. அநேகர் வேதத்தில் அதிகமான அதிகாரங்களை வாசிப்பர். ஆனால் அதின்படி ஜீவிக்கமாட்டார்கள். வேதத்தை வாசிப்பது மிகவும் அவசியமானது போல, வாசித்த வேத பகுதியைக் கைக்கொண்டு அதன்படி ஜீவிப்பதும் முக்கியம். அப்பொழுது மட்டுமே பொற்பாத்திரமாய் நாம் மாற இயலும். வேதத்தை வாசிக்கிற நம்முடைய ஜீவியம் புறஜாதிகளால், மற்ற மார்க்கத்தாரால் வாசிக்கப்படக்கூடிய நிருபமாய் காணப்பட வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகள் நம்முடைய வாழ்க்கையாய் மாறும்போது வார்த்தையாகிய தேவன் எப்படியோ அப்படியாக நாமும் மாறுவோம். அவர் எவ்விதமாய் மகிமையின் ஸ்தலத்திற்கு ஏறிச் சென்றாரோ அப்படியே நாமும் செல்ல இயலும். ஆகவே இதுவரை கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டும் கைக்கொள்ளாத புத்தியில்லாதவர்களாயிருப்போமாயின், இனிமேலாவது அவருடைய வார்த்தையைக் கேட்டு அதன்படி செய்கிற புத்தியுள்ள மனிதர்களாய் மாறுவோம். மகிமையின் பொற்பாத்திரமாய் மாறி மகிமையின் ஸ்தலத்தை சுதந்தரிக்க ஆயத்தமாகுவோம்.

இதுகாறும் நாம் கெட்டுப்போன பாத்திரம், சாவு உள்ள பாத்திரம், மண்ணெண்ணெயுள்ள பாத்திரம், மன்னாவுள்ள பொற்பாத்திரம் ஆகியவற்றைக் குறித்து சிந்தித்தோம். மேற்கண்ட பாத்திரங்களின் அனுபவங்களை ஆராய்ந்து நான் எப்படிப்பட்ட பாத்திரமாய் இருக்கிறேன் என்று தியானிப்போமாக. விட்டுவிட வேண்டிய காரியங்களையும், செய்ய வேண்டிய காரியங்களையும் கர்த்தர் உணர்த்தும் போது அதற்குக் கீழ்ப்படிந்து கனமான, ஆயத்தமாக்கப்பட்ட, உபயோகப்படக்கூடிய, பரிசுத்தமான மகிமையின் பொற்பாத்திரமாய் மாற கர்த்தர் உங்களுக்குக் கிருபை அளிப்பாராக. ஆமென்.

வேதாகமத்தை அறிந்து கொள்ளுங்கள்

(Know your Bible)

யோசுவா (Joshua)

எழுதியவர் : மோசேயின் பின்வாரிசான யோசுவா.

"யோசுவா" என்பதற்கு "யெகோவாவே இரட்சிப்பு" என்று பொருள். புதிய ஏற்பாட்டில் இது இயேசு என்று பொருள்படும்.

யோசுவா ஒரு பெரிய தளபதி. எகிப்தில் பிறந்த அடிமைகளில் ஒருவன். அவர் ஒரு ஜெபவீரர்; வீரமிக்கவர், தேவனை சார்ந்து ஜீவித்தவர் தேவன்மேல் நம்பிக்கையும், மக்கள் நலத்தில் அக்கரையும் உள்ள ஓர் தலைவர். இயேசு கிறிஸ்துவுக்கு ஒத்ததான வாழ்க்கை வாழ்ந்தவர். இஸ்ரவேலர் வனாந்தரத்தில் அலையும்போது அவருக்கு வயது 40. கர்த்தரிடத்தில் இருந்து கட்டளை பெற்றபோது வயது 80. தன்னுடைய 110-வது வயதில் மரித்தார்.

நோக்கம் (Aim) இரட்சிப்பு என்பது நரகத்திலிருந்து விடுதலை மட்டுமல்ல, மோட்சம் செல்வதற்கான ஓர் விடுதலையும்கூட, ரோமர் 4:25-ல் கூறப்பட்டுள்ளபடி அவர் (இயேசு) நமது பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும் நாம் நீதிமான்கள் ஆக்கப்படுவதற்காகவும் எழுப்பப்பட்டும் இருக்கிறார்.

வேறுபடுகின்ற நிலை (Stage of Transition)

இதுவரையிலும் சொப்பனங்கள் மூலமாகவும், தரிசனங்கள் மூலமாகவும், தேவதூதர்கள் மூலமாகவும் பேசிய யெகோவா எழுதப்பட்ட அவருடைய வார்த்தைகளான மோசேயின் நியாயப்பிரமாணம் மூலம் தமது மக்களுடன் தொடர்பு கொண்டார் (யோசுவா 1:8)

தங்க வசனம் or திறவுகோல் வசனம் : யோசுவா 1:3.

திறவுகோல் வாக்கியம் : "சுதந்தரித்துக் கொள்ளுதல்"

இஸ்ரவேலர் விடுதலையையும், சுதந்தரிப்பையும் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால் வெற்றியோ கர்த்தருடையது. இன்றைய நாட்களிலும் கிறிஸ்தவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் கொடுக்கப்படுகிறது. ஆனால் அதைப் பெற்றுக்கொள்வது அவர்கள் சோதனைகளை மேற்கொள்வதைப் பொருத்தது. ஆகவே மாமிசீக பலவந்தத்தினால் அல்ல, முற்றிலுமாய் பரிசுத்தாவியானவரின் ஆளுகைக்கு ஒப்புக்கொடுக்கிற விசுவாசியே இத்தகைய சுதந்தரத்தை தனக்கு சொந்தமாக்கிக் கொள்ள முடியும்.

வேத பாடம் (Bible Study) 7

ஆபிரகாமின் வாழ்க்கை வரலாறு (The life of Abraham)

கடந்தமுறை நமது வேதபாடத்தில் லோத்தின் கண்களுக்கு முன் ல்லவர்களாய் காணப்பட்ட சோதோமின் ஜனங்கள் தேவனுடைய பார் வையில் பொல்லாதவர்களும், பாவிகளுமாய் காணப்பட்டனர். தேவன் ர்க்கிறவிதமாய் இந்த உலகத்தையும், உலகத்தின் ஜனங்களையும் நாம் ண்டு ஐக்கியப்பட வேண்டும் என கண்டோம். ஒரு பொருளை, உலகத்தை, னுஷர்களைத தேவன் எந்த எண்ணத்தில், எந்த கோணத்தில் பார்க்கி ரோ அவ்விதமாய் நாமும் காணத்தக்க தேவனிடம் கிருபையைக் கேட் பாமாக. இன்று தொடர்ந்து ஆபிராமின் வாழ்க்கையை ஆராய்வோ ாக.

ஆதியாகமம் 13:14. ''லோத்து ஆபிராமை விட்டு பிரிந்த பின்பு''. லாத்து ஆபிராமுடன் ஒன்ருய், ஐக்கியமாய் இருக்கும் வேளைவரை கர்த்தர் ஆபிராமுடன் பேசவே இல்லை. ஆனல் லோத்து எப்போது ஆபி ராமை விட்டுப் பிரிந்தானே அப்போதே கர்த்தர் பேசுகிருர். அவர் பேசு வதை ஆபிராம் கேட்கக்கூடியவனுய் காணப்படுகிருன். இது ''வேறு பிரி தல்'' (Seperation) மிகவும் முக்கியம் என்பதை நமக்குத் தெளிவுபடுத்து கிறது. முன்பு ஆபிராமின் தகப்பனுகிய தேராகு ஆபிராமுடன் இருக்கும் வரை கர்த்தர் ஆபிராமுடன் பேசவே இல்லை. தேராகு அகற்றப்பட்ட பின்பு ர்த்தர் ஆபிராமுடன் பேசினுர். இன்னமும் கர்த்தர் ஆபிராமுடன் பேச இயலாததால் லோத்தும் வேறுபிரிக்கப்பட்டான், Now Abraham is alone with God. ஆம்! ஆபிராமை அழைத்தது கர்த்தர். அவனை அழைத்த ற்கும் ஓர் நோக்கமுண்டு. அவர் அழைத்த நோக்கம் ஆபிராமில் நிறை வேற வேண்டுமாயின், தடையாயுள்ள அனைத்து காரியங்களும் அகற்றப் பட வேண்டும். அகற்றப்பட்டபின்பே, வேறுபிரிந்த பின்பே கர்த்தர் பேசுவார். யாக்கோபு ஒருமுறை கர்த்தருடன் பேச விரும்பினுன். ஆகவே அவன் அகற்றவேண்டிய அனைத்துக் காரியங்களையும் அகற்றி தனித் திருந்தான் (ஆதி. 32·24). விசுவாசியே! இன்று கர்த்தர் உன்னுடன் பேசுகிருரா? நம்முடைய ஆண்டவர் பேசுகிறவர். அவர் உன்னிடம் பேசு வதற்குத் தடையாய் காரியங்கள் உள்ளதா? ஒருவேளை ஆபிராமைப்போல் தேவனுல் நீவிர் அழைக்கப்பட்டவனுய், இரட்சிக்கப்பட்டவனுய் இருக்க லாம். ஆனல் இன்று உம்முடைய வாழ்க்கையில் கர்த்தருடைய சத்தத் தைக் கேட்க இயலாமலும், கேட்டாலும் கிரியை நடப்பிக்க இயலாமல் இருப்பதற்குக் காரணம் உம்முடன் இன்னமும் லோத்து இருப்பதாலேயே,

Seperation is very very important. இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளை அவிசுவாசியுடன், பாவிகளுடன், துன்மார்க்கருடன் காணப்படும் வேளையில் கர்த்தர் சத்தத்தைக் கேட்கவே இயலாது.

வேறுபிரிந்து வருதல் என்பது அநேகருக்குக் கஷ்டமாயுள்ளது அநேக சாக்குப்போக்குகளைச் சொல்கின்றனர். அப் 2 40-ல் மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள் என்று புத்தி சொல்லியிருக்க இன்று அனேகர் வேறுபிரிந்துவர தயக்கமும் அச்சமும் கொள்கின்றனர். கிறிஸ்தவ உலகில் இரண்டு கூட்டத்தினர் மட்டுமே உண்டு. ஒன்று இரட்சிக்கப்பட்டு வேறுபிரிந்த கூட்டம். மற்றொன்று இரட்சிக்கபபடாத கூட்டம். இந்த இரண்டு கூட்டத்திலும் ஒரே நேரத்தில் ஒருவன் காணப்படக்கூடாது. ஆவிக்குரியவர்கள் மத்தியில் ஆவிக்குரியவனும், இரட்சிக்கப்படாத கூட்டத்தில் அவர்களுக்கேற்றவனும் காணப்படுகிற நண்பனே உன்னுடையநிலை தேவன் பார்வையில் பரிதாபமே. ஏனெனில் அவர் உன்னுடன் பேசமாட்டார். உலகததில் ஒரு சூதாட்டக்கும்பல் உட்கார்ந்து சூதாடிக் கொண்டிருக்கிறது. என்று வைத்துக்கொள்வோம். அதை ஒருவன் வெறுமனே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில், போலீசார் வந்தால் சூதாட்டக் கும்பலையும், வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவனையும் சேர்த்தே பிடித்துச் செல்வர் உலகின் சட்டமே இவ்விதமாயிருக்குமாயின், சூதாட்டக்காரன், பாவி, விபச்சாரக்காரன் சகல கேடுகளும் நிறைந்தவனுடன் நீ ஆராதனையில் காணப்பட்டு அவன் வாய்வைத்த பாத்திரத்தில் நீயும் வாய் வைத்து பங்கு பெறுவாயாஞல் நிச்சயம் பரலோக சத்தத்தை கேட்கவே இயலாது ஆகவே கர்த்தரின் சத்தம் கேட்கும்படி வேறுபிரிய வேண்டிய காரியங்களில் வேறு பிரிந்து காணப்படுவாயாக.

<u>வசனம் 13 :</u> ''நீ இருக்கிற இடத்திலிருந்து'' From the place where thou art. God has found a total seperation in the life of Abraam. ''நீ இருக்கிற இடத்திலிருந்து'' ஆம்! நாம் இருக்கும் இடம் முக்கியமானது. தேவன் அதைப் பார்க்கிறார். நாம் ஒவ்வொருவரும் இருக்கவேண்டிய இடமாக தேவன் ஒன்றை நியமித்துள்ளது உண்மை உங்களுக்கென்று நியமிக்கப்பட்ட இடத்தில் நானும், எனக்கென்று நியமிக்கப்பட்ட இடத்தில், நீங்களும் நிச்சயம் காணப்படவே கூடாது. தங்களுக்கென்று நியமிக்கப்பட்ட இடத்தை விட்டு விட்டு வேறு ஆளைப்போல ஊழியர்களைப்போல தாங்களும் காணப்படும்படியாக வேறு இடத்திற்கு அநேகர் செல்வதால் ஆசிர்வாதத்தை இழந்து போகின்றனர். தேவன் தம் ஜனங்களை ஆசீர்வதிக்கும்படியாய் வரும் வேளையில், அவர்களுக்கென்று நியமிக்கப்பட்ட இடத்தில் அவர்களைக் காண இயலாமல் திரும்பிச் சென்று விடுகிறார். இவ்விதமாய் அநேகர் ஆசீர்வாதத்தை இழந்து போகின்றனர்.

மோசே 40 வருடமாய் வனாந்திரத்தில் தனிமையாய் அலைந்தான் ஆனால் தேவன் நியமித்த இடமாகிய ஓரேப் பர்வதத்தண்டை ஒரு நாளில் (யாத். 3:1,2) வந்தபோது மோசேயுடன் கர்த்தர் பேசி, தரிசனமானார். நீ இருக்கும் இடம் முக்கியமானது விசுவாசிகளாகிய அநேகர் இருக்கிற இடமல்ல, உள்ளமே முக்கியம், உள்ளமே பரிசுத்தமாய் இருக்கவேண்டும் என்கின்றனர். தவறு. பேதுரு இருக்கக்கூடாத இடத்தில் உட்கார்ந்தபடியினால் அல்லவோ இயேசுவை மறுதலித்து, சபித்து சத்தியம் பண்ணினான். பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராதே சங். 139:2-ல் தாவீது ஆண்டவரை நோக்கி என் உட்காருதலையும், என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர் என தைரியமாய் கூறுவதுபோல உன்னையும், உன்னுடைய இடத்தையும் காணும் தேவனுக்கு முன்பாக தைரியமாய் நீ இருக்கும் இடத்தைப்பற்றி சாட்சி கூற உன்னால் இயலுமா? உன்னை ய கேட்டுக்கொள். நான் எங்கே இருக்கிறேன்? Where am I ? எப்படிப்பட்ட இடத்தில் நான் இருக்கிறேன்? what place am I in? what are my connections in this life ? Am I wholly seperated unto the Lord? தேவனுக்காக நான் முழுவதுமாய் எல்லாக்காரியங்களிலும் வேறுபிரிக்கப்பட்டு உள்ளேனா? நண்பரே! நீவிர் மட்டுமல்ல, நீவிர் இருக்கும் இடமும் தேவனுடைய பார்வையில் முக்கியமே.

வசனம் 13 : ''உன் கண்களை ஏறெடுத்து'' ''Lift up now thine eyes'' ஆபிராமை கர்த்தர் பார்த்து ''கண்களை ஏறெடுத்துப்பார் எனக் கூறுகிறார். ஆனால் இவ்வித அனுபவமில்லாத லோத்து (வசனம் 10-ல்) தானாகவே தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கிறவனாய் இருந்தான் கர்த்தர் சொன்னபின்பு நோக்குவதற்கும், கர்த்தர் சொல்லாமல் நோக்குவதற்கும் வேறுபாடு உண்டு. கர்த்தர் சொன்னபின்பு எதையுமே செய்தால் ஆசீர்வாதம். வேத வசனத்தின்மூலம் ஆபிராம் மூன்று முறை தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கிறான் (ஆதி. 13, 18, 22). எப்பொழுதுமே கர்த்தர் சொன்னபின்பு செய்யும் காரியங்களில் மிகுதியான ஆசீர்வாதம் நமக்குண்டு. வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு ஆகிய நான்கு திசைகளிலும் உள்ள ஆசீர்வாதத்தை 'நோக்கிப்பார்'' என கர்த்தர் ஆபிராமிடம் கூறு தேவனுடைய அழைப்பைக்கேட்டு, அவருக்குக் கீழ்ப்படிந்து, வேறுபிரிய வேண்டியவர்களை விட்டு வேறுபிரிந்து, தேவன் விரும்பும் இடத்தில் இருப்பவனுக்கு ஆசீர்வாதம் நான்கு திசைகளிலும் இருந்து வருகிறது. பிரிய ஏற்பாட்டு விசுவாசியாகிய நீயும் இவ்விதமாய் அழைப்பைக்கேட்டு, கீழ்ப்படிந்து, வேறுபிரிந்து. தேவன் விரும்பும் இடத்தில் இருப்பாயானால் உனக்கும் இன்று நான்கு பக்கங்களிலும் இருந்து உனக்கென்று நியமிக்கப்பட்ட ஆசீர்வாதம் புறப்பட்டு வரும். அதையே எபேசியா 3:18-ல்

கிறிஸ்துவினுடைய அன்பின் அகலம், நீளம், ஆழம், உயரம் எவ்வ காணலாம். நண்பரே உனக்கு ஆசீர்வாதம, அனுக்கிரகம் வரக்கூடிய நான்கு திசைகளும் மேற்கண்டவைகளே. இந்த கிறிஸ்துவின் அன் நிறைந்த நான்கு திசைகளாகிய அவருடைய அன்பின் அகலம், நீளம் ஆழம், உயரம் இவற்றை இன்று நோக்கிப்பார். நீ நோக்கிப் பார்க்கும் படி, ஏறெடுத்துப் பார்க்கும்படி கர்த்தர் கட்டளையிடும் காரியம் இன்று இதுவே, வேறெதுவையும் நோக்காதே.

வசனம் 15 & 16 : Here we are seeing a great promise for Abram and for His generations ஆம்! ஆபிராமிற்கும், அவனுடைய சந்ததிக்கும் மேலான வாக்குத்தத்தம் கொடுக்கப்படுகிறது. நாம் இந்த பகுதியை ஆராயுமுன் ஆதியாகமம் 12-ம் அதிகாரத்தை நோக்க வேண் டும். அங்கு ஆபிராமை கர்த்தர் அழைக்கும் வேளையில் ''நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்குப்போ'' என கூறுகிறார். ஆனால் 13:15 & 16 ல் ''இந்த தேசத்தை உனக்கும் உன் சந்ததிக்கும் கொடுத்து'' என்றும், 17-ம் வசனத்தில் ''தருவேன்'' என்றும் கூறுகிறார் ''காண்பிப்பேன்'' என்பதற்கும், ''தருவேன், கொடுப்பேன்'' என்பதற்கும் அதிக வித்தியாசம் உள்ளதை எளிதாக நாம் உணரலாம். காண்பிப்பேன் என்று ஆபிராமி டம் கூறிய கர்த்தர் கொடுப்பேன் என்றும் தருவேன் என்றும் கூறுமள விற்த ஆபிராமின் ஜீவியம் கர்த்தருடைய பார்வையில் செம்மையாய் காணப் ப்பட்டது. அழைக்கப்பட்ட அநேகர், தெரிந்துகொள்ளப்பட்ட அநேகர் தங்களுக்கென்று தேவன் நியமித்த ஆசீர்வாதங்களை இழந்துபோகும் வேளையில், ஆபிராமோ மேலான வாக்குத்தத்தங்களையும் ஆசீர்வாதங்களை யும பெறுகிற மனிதனாய் காணப்பட்டான். அன்பரே! உன்னதங்களிலுள்ள சகல ஆசீர்வாதத்திலும் ஆசீர்வதிக்கப்படுகிறவனாய் காணப்படுகிறாயா அல்லது இருப்பதையும் இழக்கிறவனாய் இருக்கிறாயா?

உனக்கும் எனக்கும் கொடுக்கும்படியாக, தரும்படியாக கர்த்தரிடம் ஏராளமான காரியங்கள் உண்டு. தேவனுடைய பிள்ளைகள் இவ்வுலகில் தரித்திரனாக, வியாதியுள்ளவனாக, ஞானமில்லாதவனாக, தேவையுள்ளவனாக இருக்க கர்த்தர் விரும்புவதில்லை அநேகர் தவறாய் எண்ணிக்கொண்டு பரலோகில்தான் தங்களுடைய குறைவுகள் நிறைவாகும் என எண்ணு கின்றனர். அன்பரே! இவ்வுலகில் நீவிர் வாழும் நாட்களிலேயே எல்லா வற்றிலும் நிறைவுள்ளவனாய் காணப்பட கர்த்தர் விரும்புகிறார். உம் முடைய வாழ்வில் நிறைவைக் கொடுக்க அவரிடம் ஏராளம் பண்டகசாலை யில் உண்டு. எபேசியரில் தேவனுடைய ஐசுவரியங்களைப்பற்றி ஆறு இடங்களில் கூறப்பட்டுள்ளது. அவர் கிருபையின் ஐசுவரியம் உள்ளவர் (எபே. 1:7) மகிமையின் ஐசுவரியமுள்ளவர் (1:18) இரக்கத்தில் ஐசுவரிய

ள்ளவர் (2:4) மகா மேன்மையான ஐசுவரியமுள்ளவர் (2:6) அளவற்ற
வரியமுள்ளவர் (3:8) மகிமையின் ஐசுவரியமுள்ளவர் (3:19) என
றப்பட்டுள்ளது அவரிடம் உள்ள ஐசுவரியத்தையெல்லாம் உனக்குக்
ணபிப்பதற்காக அல்ல, கொடுப்பதற்காகவும், தருவதற்காகவுமே, அவர்
வத்துள்ளார். ஆபிராமைப்போல் காணப்படுவீராயின் அவைகளை
மக்குத் தருவார்.

ஆகவே தேவன் தமக்குத் தரப்போகும் தேசத்தில் நீளமாக, அகல
க, எவ்வளவு தூரம் தன்னால் நடந்துசெல்ல இயலுமோ, அவ்வளவாய்
க்கும்படி தேவன் கட்டளையிட்டார். ஆபிராம் தேசத்தின் நீளத்திலும்,
லத்திலும் எவ்வளவாய் நடக்கிறானோ அவ்வளவாய் அவனுக்குக்
டுக்கப்படும் என்பதை நாம் அறிகிறோம் தேவன் நமக்குக் கொடுக்
. தருவதற்கும் ஆயத்தமே என்றாலும், நாம் அவற்றைப் பெற்றுக்
ாள்ள அவற்றின் மத்தியில் நடக்க வேண்டியது அவசியமே தேசத்
ஆபிராம் நடந்து திரியாமல அவைகளைப் பெற்றுக்கொள்ள இயலாது.
ஆசீர்வாதத்தைப் பெறவேண்டுமோ அதற்காக ஆபிராம் உண்மை
ளவனாய், கஷ்டத்தையும், வேதனையையும் பாராது நடக்க வேண்டி
அவசியமாயிருந்தது போல் விசுவாசிகள் ஆசீர்வாதத்தைப்பெற தேவ
டைய பார்வையில் உண்மையாய் நடக்க (வார்த்தை, சொல், செயல்
பார்வை எண்ணம்) வேண்டியது அவசியமே. அப்போது மட்டுமே
வைகளை நமக்குச் சொந்தமாய் சுதந்தரித்துக் கொள்ள முடியும். மட்டு
ல், ஆபிராம் தேசத்தில் நீளம், அகலம் ஆகியவற்றில் எவ்வளவு தூரம
க்கிறானோ அவ்வளவாய் அவன் பெற்றுக்கொள்வான் என கர்த்தர்
கிறார் அதாவது ஆபிராம் எவ்வளவு தூரம் நடந்தானோ அவ்வள
ய ஆபிராமிற்குச் சொந்தம் எனக்காண்கிறோம். வேலைக்கேற்ற கூலி,
யாசத்திற்கேற்ற பலன் இவற்றையே இது காண்பிக்கிறது. ஆபிராம்
ந்த இடமெல்லாம் ஆபிராமிற்குச் சொந்தம். ஆபிராம் நடந்த இடத்
க் கொடாமல் கர்த்தர் வைத்துக்கொள்ளமாட்டார். அன்பரே! உம்
டைய கிரியைகளுக்குப் பலனுண்டு என்ற வேதவசனத்தை நினைவு
ங்வீராக. ஆம்! கர்த்தருக்கு முன்பாக எவ்வளவு உண்மையாய் நீவிர்
க்கிறீரோ அவ்வளவாய் உமக்கு பிரதிபலன் உண்டு. ஆம்! அவனவ
டைய கிரியைகளின்படி அவனவனுக்கு அவர் அளிக்கும் பலன் அவரோடு
வருகிறது (வெளி. 22:12). மனுஷகுமாரன் வரும்பொழுது அவன
ன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார் (மத். 16:27).
வனுக்கு முன்பாக உண்மையாய் நடக்கக் கற்றுக்கொள்ளும். ஆபிராமே!
முடைய நடைக்குத்தக்க, உண்மைக்குத்தக்க பலன் உண்டு. ஆகவே
ண்மையாயிரும்.

<u>வசனம் 18</u>: ''ஆபிராம் கூடாரத்தைப் பெயர்த்துக்கொண்டு''
நாம் ஏற்கனவே கண்டபடி ஆபிராம் கூடாரவாசியாக இன்னமும் காண
படுகிறான். கூடார ஜீவியமே கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் தேவை
இவ்விதமாய் கூடாரத்தை எடுத்துக்கொண்டு ஆபிராம் ''எபிரோன்''
என்னுமிடத்திலுள்ள ''மம்ரே'' சமபூமியில் குடியிருந்து <u>கர்த்தருக்கு</u> ஓ
பலிபீடம் கட்டினான் ஆபிராம் இதற்கு முன்பும் பலிபீடம் கட்டியுள்ளான
ஆனால் அதற்கும் இதற்கும் வித்தியாசம் உண்டு. பலிபீடம் தேவனுட
உள்ள ஐக்கியத்தைக் குறிக்கும். மம்ரே என்பதற்கு ''சக்தி'' அல்லது
''வலிமை'' என்று பொருள். எபிரோன் என்பதற்கு ''ஐக்கியம்'' என்பது
பொருளாகும். எபிரோனில் குடியிருக்கும் இவ்வேளையில் ஓர் பலிபீட
கட்டுகிறான். இது தேவனுடைய ஐக்கியத்தில் நிலைத்திருந்து வலிமையை
பெறுவதற்கு அடையாளமாம். அநேக கிறிஸ்தவர்கள் வாரத்தில் ஒ
நாள்கூட தேவனுக்கு முன்பாக தேவனோடும், தேவபிள்ளைகளோடு
ஐக்கியப்பட்டு வலிமையைப்பெறத் தவறிவிடுகின்றனர். ஆனால் தேவ
னோடுள்ள ஐக்கியத்தின் மூலமாய் மட்டுமே வலிமையைப்பெற இயலு
என்பதை ஆபிராம் உணர்ந்து அதினிமித்தம் ஐக்கியம்கொள்ள, தேவனோ
தொடர்புகொள்ள <u>கர்த்தருக்கு</u> (unto the Lord) ஓர் பலிபீடம் கட்டினா
விசுவாசி என்ற பெயருள்ள சகோதரனே சகோதரியே! உன்னில் வலிமை
காணப்படாததற்குக் காரணம் உன்னில் தேவனோடும், தேவபிள்ளைகளுட
னும் உள்ள ஐக்கியம் சரியாக இல்லாததே காரணமாகும். ஆபிராம்
கர்த்தருக்கு ஓர் பலிபீடம் கட்டினான் ஆபிராம் செய்த அனைத்து காரி
யங்களும் கர்த்தருக்கு முன்பாகவும் கர்த்தருக்கென ஆபிராம் செய்த
ஆபிராமைத்தவிர வேறுயாருக்கும் தெரியாது ஆனால் இன்றோ அனேகர்
கர்த்தருக்கென்று ஒன்றுமே செய்வதில்லை. எப்போதுமே அவரிடம் கேட்
கிறவர்களாகவே இருக்கின்றனர். கர்த்தருக்குச் செய்பவர்களென்று தங்
களைக் கூறுபவர்களில் அநேகர் மனுஷருக்குத் தெரியவேண்டும் என்று
எண்ணி கர்த்தருக்காகவும், கர்த்தருடைய ஊழியத்திற்காகவும், செய்வதை
மனுஷர்களுக்கும், மற்றவர்களுக்கும் முன்பாக செய்து தங்கள் பெயரை
பரப்புகின்றனர். அன்பானவரே கர்த்தரோடு ஐக்கியப்பட்டு அவருடைய
பிள்ளைகளுடன் ஐக்கியப்பட்டு பெலனடைந்து, அவரிடத்தில் எப்போதும்
கேட்கிறவர்களாயல்ல, அவருக்கு மட்டுமாய் தெரியும்படி அவருக்கென
அதிகமாய் செய்வோமாக. தேவன்தாமே அப்படிப்பட்ட கிருபையை
உங்களுக்கு அளிப்பாராக. ஆமென்.

...றவும் விடையும் :

...ஸர.

மாற்கு 11:13-ல் அத்திப்பழ காலமாயிராதபோது அத்திமரத்தில் ...ியைப்பார்த்து இல்லாததால் இயேசு மரத்தை சபித்ததாகக் கூறப் ...ல்லவா தே கனி கொடுக்கவேண்டிய காலமல்லாத அத்திமரத்தில் ...ியை எதிர்பார்த்தது எவ்விதம் சரி? அதை ஏன் இயேசு சபிக்க வேண் ...? தயவுசெய்து விளக்குங்கள். (S ராஜரத்தினம், நீலகிரி)

பதில் : அத்திமரத்தில் இயேசு எதிர்பார்த்தது காலத்தில் கொடுக்க ...ண்டிய கனியை அல்ல. அகால கனியை அவர் எதிர்பார்த்தார். ...பதுகை பழமரங்கள் தன் காலத்தில் கனியைத்தருவது மட்டுமல்லாமல், ...லத்திலும் (unseason) ஓரிரு கனிகளைத் தருவதை யாவரும் காண ... காலங்களில் அதிக அளவில் கனிகளையும், அகாலங்களில் குறை ...(ஓரளவு). கனிகளையும் கொடுப்பதுண்டு இயேசு இந்த மரத்தை ...தத்திலிருந்து இந்த மரம் தன்னுடைய காலத்திலும் கனியைத்தரவில்லை. ...லத்திலும் கனியைத்தரவில்லை எனவே அதை சபித்தார். இந்த ...மரம் இஸ்ரவேலை குறிக்கும் ஏறக்குறைய 2000 வருடங்கள் ...ப்போயிருந்தது 1918 மே 14-ல் மறுபடியும் துளிர்த்துவிட்டு உள் ... வசந்த காலம் சமீபம், கிறிஸ்துவின் வருகைக்கு எச்சரிக்கை ...யும் முன்னடையாளம்.

...

ஏளனத்திற்கும், கேலிக்கும் உள்ளாக்கப்பட்டாலும் பொறுமையுடன் ...ந்து மற்றவர்களை ஆசீர்வதிக்க வேண்டிய ஊழியக்காரனாகிய எலிசா ...ன மொட்டைத் தலையா என்று கேலிசெய்த சிறுபிள்ளைகளை சபித்து ...பேரை கரடி பீறிப்போடும்படி செய்தது எங்கனம் நியாயமாகும்?

(V சாலமோன், கோயம்புத்தூர்)

பதில் : எலிசா பழைய ஏற்பாட்டு ஊழியக்காரன், நியாயப் பிர ...ணத்திற்கு உட்பட்டவன். ஜனங்கள் தேவனுக்குப்பயந்து ஊழியக் ...ரனைக் கனப்படுத்தும்படியாக, தேவன் ஊழியககாரரின் வார்த்தையின் ... செய்துவந்தார். அங்கனமில்லையெனில் தேவனுடைய வழியில கற் ...யில், பிரமாணத்தின்படி ஜனங்களைக் கட்டுப்படுத்தி நடத்த இயலாது. ...கு அளிக்கப்பட்ட நியாயத்தீர்ப்பு பிள்ளைகளுக்கல்ல, பெற்றோர்களுக ...கும் பிள்ளைகள் பெரியவர்களையும், தேவனுடைய ஊழியர்களையும் ...லி செய்யும் அளவிற்கு வளர்ந்திருந்தனர். பெற்றோர்கள் பிள்ளைகளை ...வபயத்தில் வளர்க்கவில்லை என்பதை இதன்மூலம் தெளிவாய் அறிய ... எலியாவும், எலிசாவும் பெத்தேலுக்குப் புதிதானவர்கள் அல்ல. (2 இராஜா. 2:1,2). பிள்ளைகளின் அக்கிரமத்தை பிதாக்களிடம் விசாரிப்

பது நியாயப்பிரமாணகால தேவநீதியாய் இருக்கிறது (யாத். 20:5;34:7) எனவே இந்த நியாயத்தீர்ப்பு பெற்றோர்களுக்கு அளிக்கப்பட்டதாகு சிறுவயதிலிருந்தே பிள்ளைகளை தேவபயத்தில் வளர்க்க இது நமக்கு ஒ எச்சரிக்கை (1கொரி. 10.11; ஆதியா. 18:19).

நண்பனுக்கு ஓர் கடிதம்:

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரன் ஜெபராஜிற்கு, இரட்சகரின் நாமத்தில் வாழ்த்துதல்

நீ எழுதிய கடிதம் கிட்டத்தது சகலவற்றையும் அறிந்தேன். உன்னுடைய மேலான வாஞ்சையையும், நோக்கத்தையும் பாராட்டுகிறேன் ஆம்! நீ எழுதியபடி இந்த உலகில் வாழ்வது கொஞ்ச நாட்களே. அது வும் இயேசுவுக்காய் வாழ்ந்த வாழ்க்கையாய் இருக்குமாயின் அதைவிட பாக்கியம் வேறெதுவுமில்லை. அதே சமயத்தில் இப்படிப்பட்ட வாஞ்சை யுள்ள உன்னிடமிருந்து ஈனஸ்வரத்தில் (வெளியே யாருக்கும் கேட்காத படி) வெளிப்படும் வேதனையின் குரலையும் கண்டு உன்னுடன் சேர்ந்து நானும் துக்கித்தேன்.

இயேசுவுக்காய் பரிசுத்தமாய் ஜீவிக்கவும், ஆத்துமாக்களை ஆதாயம் செய்யவும், மற்றவர்களின் ஜீவியத்தைத் தொடக்கூடிய சாட்சியாய் மாற ஜெபம் தேவை. மொத்தத்தில் எல்லா இடங்களிலும், எல்லா சூழ்நிலை களிலும், எல்லா காரியங்களிலும் வெற்றியுள்ள கிறிஸ்தவனாய் காணப் பட ஜெபம் அதிகம் தேவை. ஜெபம் இல்லாவிட்டால் ஜெயமில்லை. அந்த ஜெபமும் பரலோகத்தை அசைக்கக்கூடிய ஜெபமாய் இருக்க வேண் டும் நீ அதிகமாய் ஜெபிக்க விரும்புவதாயும், கூடுமானவரை தனிமை யாய் ஜெபிக்க விரும்புவதாயும் எழுதி இருந்தாய். அதே நேரத்தில் காலையிலோ, மதியமோ, சாயங்காலமோ, இரவிலோ எப்பொழுது முழங் கால்படியிட்டு ஜெபிக்க ஆரம்பித்தாலும் நீ நன்றாய் தூங்கிவிடுவதாயும் எப்படித் தூங்குகினேன் என்றுகூட அறியாதவனாய் இருக்கிறேன் என்று எழுதி இருந்ததைக் கண்டு அதிக வேதனைப்பட்டேன். கிறிஸ்தவன் அதிகம் ஜெபிக்கவேண்டியவன். அதிலும் ஜெபராஜ் என்று பெயர் வைத் துள்ள நானே ஜெபிக்காமல், ஜெபிக்க முழங்கால்படியிட்டவுடன் தூங்கி விடுகிறேனே என்று வேதனைப்பட்டிருந்தாய், நீ மட்டுமல்ல அநேக ஜெப ராஜ், ஜெபசீலி, ஜெபத்தாய் ஜெபக்கனி, ஜெபசிங் ஆகியோர் உன்னைப் போலவே வேதனையும், புலம்பலுமாய் இருக்கிறார்கள்.

ஜெபிக்க வேண்டிய நேரத்தில் தூங்குவதும், ஆராதனையில் செய்தி கேட்டுக்கொண்டிருக்கும்போதும் தூங்குவது தவறு மட்டுமல்ல, அது ஏமாற்றுத்தனம் (Cheating) என்று கூட அர்த்தமாகும். தேவனுக்கு முன்பாக தனியறையிலும், சபையில் அனேகருக்கு ஜெபிப்பதுபோல் காட்டிவிட்டு தூங்குவது, எப்படி ஒரு பொருளை உறுதி கூறிவிட்டு, அதைப்போலொத்த மோசமான பொருளைக் வியாபாரி ஏமாற்றுகிறானோ அதைப்போன்றதாகும். விழித் வேண்டிய வேளையில் தூங்குகின்ற அநேகருண்டு. அவர்கள் எந்நேரத்திலும் சபை கூடிவரும் போது தூங்கும் ஆற்றலுடைய அவர்களை யாராவது தட்டியெழுப்பித் தூங்கவேண்டாமெனக் தாம் தூங்கவில்லையென்றும், ஜெபித்துக் கொண்டிருந்ததாகவும் சிலருக்கு முழங்கால் போட்டவுடன் வாயை ஆவென்று ஆவியை (கெட்ட ஆவி) வெளியேற்றி தூங்க ஆரம்பிப்பர்.

உனக்கு எழுதும் இக்கடிதத்தில் தூக்கத்தை மேற்கொள்ள வழியைச் அல்லது தூக்கத்தினால் இழந்துபோகும் ஆசீர்வாதங்களைக் என்றறியாது தவிக்கிறேன். நண்பா! ஜெபம் என்பது தேவ நாம் பேசுவது மட்டுமல்ல, உரிமையுடன் உறவாடுவதாகும். உறவாடுவதையும், பேசுவதையும், அதன்மூலமாய் பலம் ஜெயமுள்ள ஜீவியம் செய்ய ஒருநாளும் பிசாசு சம்மதிக்கவே வீணாக பொழுது போது, நண்பர்களுடன் அரட்டையயுக் இன்னுமநேக காரியங்களில் வீணாக ஈடுபடும்போது எத்தனை தூக்கம் விடுவதே இல்லை. ஆனால் தேவனுடன் உறவாட சில நிமிடங்களிலேயே தூக்கம் உன்னை அமிதத்துகிறது என் அதற்கொரு பெயர் உண்டு வேதம் அதை "கனநித்திரையின் " என்றழைக்கிறது. விழித்திருக்கவேண்டிய நேரத்தில் தூங்கிய அநேகர் ஆசீர்வாதத்தை இழந்துபோயிருக்கின்றனர். ஜெபமில்லா ஜெயமில்லை, ஆகவே தூக்கத்தையும் அசதியையும் கொண்டு பிசாசை மேற்கொண்டு ஆவியினால் நடத்தப்படவேண்டும்,

பேதுரு, யோவான், யாக்கோபு ஆகிய மூவரும் ஆண்டவருக்கு இருந்தாலும், ஆண்டவர் அவர்களை அதிகம் நேசித்தாலும் இடங்களுக்கும் அழைத்துச்சென்றார். விழித்திருந்து ஜெபம் செய் என்று கூறிவிட்டு தனியாய் சற்று தூரமாய் தள்ளி ஜெபித்துக் இயேசு வந்து பார்த்தபோது அவர்களோ தூங்கிக் கொண் அவர்களை எழுப்பி மறுபடியும் ஜெபிக்கச்சொல்லி சென்றவர் அவர்களைத் தூங்குகிறவர்களாகவே கண்டார். ஜெபிக்க வேண் நேரத்தில் தூங்கியதால் நடைபெற்றது உனக்குத்தான் தெரியுமே. விஷயங்களிலும் முந்திக்கொண்ட பேதுரு இயேசுவை பிடித் கொண்டபோது தொடை நடுங்கி அவரை மறுதலித்து சபித்தான்

மார்பில் சாய்ந்திருந்த யோவானையும், யாக்கோபு என்பவனையும் காண வே
இல்லை. தூங்கியதால் வந்த விளைவு இதுவே. இன்னொருவன் வசன
தைக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே தூங்கியது தெரியுமல்லவா. அவ
தான் ஐத்திகு என்னும் வாலிபன் அவனைப்பற்றி அப். 20:9-ல் காணலா
இன்னமும் புத்தியில்லாத ஐந்து கன்னிகைகள் தூங்கியபொழுது தாங்க
எவைகளிலெல்லாம் ஆயத்தமாய் இருக்கவேண்டும் என்பதை மறந்த
யினால் அல்லவோ வெளியே தள்ளப்பட்டனர்.

நண்பா! ஆரம்பநாட்களில் அசட்டையாய் விடப்படும் இந்த தூ
கம் பின்னாட்களில் நீ ஜெபிக்கவே இயலாதபடி செய்துவிடும் என்பதை
மறவாதே. முதலாவதாக நீ ஜெபிக்க முழங்கால்படியிடுமுன் இன்றைக்
நான் என்னதான் தூக்கம் என்னைச்சுற்றி வந்தாலும் அதை மேற்கொண்
ஜெபிப்பேன் என தீர்மானம் எடு. இரண்டாவதாக மாமிசமோ பெல
வீனமுள்ளது என்று கூறிக்கொண்டிராமல், ஆவியோ உற்சாகமுள்ள
என்பதை அறிந்தவனாய் தாவீதுடன் சேர்ந்து ''ஆண்டவரே! நான் உ
முடன் ஜெபத்தில் உறவாடப்போகிறேன். ஆகவே உற்சாகமான ஆ
என்னைத்தாங்கும்படி செய்யும்படி'' என (சங். 51:12) கேள். மூன்றா
தாக ஜெபிப்பதற்கு முன் கர்த்தர் உனக்குச் செய்த எல்லா நன்மைக
யும் எண்ணினவனாய் ஸ்தோத்திரம் செலுத்து. அவ்விதமாய் நன்றியு
தலுடன் சத்தமாய் ஸ்தோத்தரிப்பாயானால் பின்பு விழித்திருந்து ஜெபிக்க
இயலும். கொலோ. 4:2-ல் ''ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திரு
கள்''. என்று கூறப்பட்டுள்ளதே. அதற்குப் பின்பு உனக்கு தூக்கமே
வராது, நீயும் அதிக நேரம் ஜெபிக்க இயலும். இவ்விதம் தூக்கம் வரு
வேளையில், உடனே தன்னுடைய இடத்தை விட்டு எழும்பி சற்றுநேர
நடந்து ஜெபிக்கிறவர்களைக் கண்டிருக்கிறேன், பரிசுத்த ஆவியினால் நிர
பப்பட்டவனாய் நீ ஜெபிப்பாயானால் (யூதா. 20) தூக்கமே உம்மை அ
டாது. உனக்காக நானும் ஜெபிப்பேன்.

கடைசியாக நண்பா! உன்னை ஆசீர்வதிக்கும்படியாய், காக்கும்ப
யாய் இஸ்ரவேலின் தேவன் தூங்குவதுமில்லை, உறங்குவதுமில்லை (சங்.
121:4) என கூறப்பட்டுள்ளது ஆதலால் மற்றவர்கள் ஜெபத்தில் தூங்
கிறது போல நீ தூங்காமல் விழித்திருப்பாயாக. (1தெச. 5:6). ஆக
நித்திரையை விட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்று என்பதை அறிவா
யாக (ரோ. 13:11) தூக்கத்தை விரும்பாதே, விரும்பினால் தரித்திர
வது மட்டுமல்ல, அநேக ஆசீர்வாதங்களையும் இழந்துபோவாய் (நீதி.
20.13). அவர் வரும்போது உன்னைத் தூங்குகிறவனாய் காணாதபடி

திரு அவருடைய உற்சாகமான ஆவி உன்னைத் தாங்குவதாக என்னுடைய ஜெபம் என்றும் உனக்குண்டு.

"Pray when it is hard to pray"

இப்படிக்கு,
உன் ஆவிக்குரிய வளர்ச்சியை நாடும்
நண்பன்

வந்த கடிதங்களில் சில

அன்பான சகோதரன் அவர்களுக்கு,

தங்கள் பத்திரிக்கை ஒரு வருடமாக எங்களுக்கு வந்து கொண்டு இருக்கிறது. ஆத்மீக வளர்ச்சிக்கு அதிக உதவியாய் இருக்கிறது. "இராக்காலம்" என்ற தலைப்பில் ஆவியானவர் உங்கள் மூலம் எங்களுக்குக் கொடுந்த செய்தி மிகவும் பயனுள்ளதாக இருந்தது. தொடர்ந்து இந்த பணியில் கர்த்தர் தங்களை வல்லமையாய் எடுத்து உபயோகிக்க ஜெபிக்கிறோம்.

ஒரு சகோதரி (சிவகாசி)

Dear Brother,

Thank you very much for your magazine. Excuse me for not writting to you for a long time. Your magazine is very useful to me and my co-workers If helps us to learn many things to walk in our daily life We are praying for your ministry. Lord will use you for His glory

Sis C, Annapushpam (Palayamcottai)

அன்பான பாஸ்டர் அவர்களுக்கு.

தாங்கள் அனுப்பி வருகிற தேவ செய்தி தொடர்ந்து கிடைத்து வருகிறது. மிகவும் பிரயோஜனமாயுள்ளது. பிரியமான பிள்ளைகள் என்ற செய்தியின் மூலம் ஆத்துமாவானது கிறிஸ்துவுக்குள் அதிகமாய் ஸ்திரப்பட வழி நடத்தப்பட்டேன். ஊழியங்களுக்காய் ஜெபிக்கிறேன்.

Bro A..ஜீவராஜ் (கம்பம்)

அன்பான போதகர் அவர்களுக்கு,

தாங்கள் எனக்கு அனுப்பிய அனைத்து பத்திரிக்கைகளையும் படித்து முடித்து விட்டேன். எனினும் எனது சகோதரனும் மற்றவர்களையும் படிக்க அவைகளைக் கொடுத்து உள்ளேன். ஒவ்வொரு தலைப்பிற்கும் தகுந்த வாறு உற்சாகத்துடனும், தைரியத்துடனும் எழுத ஆவியானவர் தங்களை

உபயோகப்படுத்துவதை நினைத்து மகிழ்கிறேன். அனைத்து பிரதிகளையும் வீட்டு விலாசத்திற்கு அனுப்புங்கள். வேதபாடத்தில் எழுதி வரும் ஆபிரகாமின் வாழ்க்கை வரலாறு ஓர் கிறிஸ்தவன் எவ்வாறு ஜீவிக்க வேண்டும் என்பதை எங்களுக்கு விளக்கமாயும், தெளிவாயும் காட்டுகிறது. வேதாகமத்தை அறிந்து கொள்ளுங்கள் என்ற பகுதி பிரயோஜனமாய் உள்ளது எங்களுக்காய் ஜெபியுங்கள்

Bro. A. ஐசக் பாலகிருஷ்ணன் (மாங்கொட்டை பாளையம்)

அன்புமிக்க போதகர் அவர்களுக்கு,

தங்களது பிரசங்க இதழ்கள் தொடர்ந்து கிடைத்துக்கொண்டு இருக்கின்றன. தவருது அனுப்பி வைக்கவும். ஆபிரகாமின் வாழ்க்கை வரலாறு மிகவும் அருமையாக உள்ளது. வேதத்தைத் தெரிந்துகொள்ளுங்கள் பகுதியும் மிகவும் பயனுள்ளதாய் உள்ளது. தமிழ் செய்தியை முகமுகமாய் கேட்பதற்கு வாய்ப்பில்லாத எங்களுக்கு தங்கள் செய்திகள் தேவாமிர்தமாக உள்ளது. உங்கள் ஊழியங்களுக்காக ஜெபிக்கிறேன்.

Bro. T. டேனியல் ஜெபராஜ் (மத்திய பிரதேசம்)

கர்த்தருக்குள் அருமையாக கிடைக்கப் பெற்ற ஐயா,

தங்களால் நடத்தப்படும் பத்திரிக்கை ஒன்று எனது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அதற்குரிய சந்தா தொகை எவ்வளவு என்று தெரிந்தால் அதையும் அனுப்பி வைக்கிறேன். தங்களது ஊழியங்களையும், பத்திரிக்கையும் தேவன் ஆசீர்வதிப்பாராக. ஜெபிக்கிறேன்.

தே. பாக்கியநாதன் (பெரும்பத்தூர்)

கிறிஸ்துவுக்குள் அருமையான Pastor ஐயா அவர்களுக்கு,

தாங்கள் வெளியிடும் ''கூடார எதிரொலி'' ஆவிக்குரிய பத்திரிக்கையை படித்துப் பார்த்தேன். உண்மையாகவே தாங்கள் வெளியிடும் கூடார எதிரொலி இதழ் ஒரு தெய்வீக தொனியாகவும், தேவ நாமம் மகிமைப்படக்கூடியதாகவும் காணப்படுகிறது. ஆகவே எனது முகவரிக்கு அனுப்பி உதவுங்கள். தங்களது ஊழியங்களுக்காக ஜெபிக்கிறேன். எனக்காகவும் ஜெபியுங்கள்.

Pastor S. V. ஜாண் சாமுவேல் (மானாமதுரை)

கர்த்தருக்குள் அன்பான சகோதரருக்கு,

தாங்கள் என் விலாசம் அறிந்து எனக்கு அனுப்பித் தந்துகொண்டுள்ள தங்களுடைய கூடார எதிரொலி தொடருக்காக தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனக்கு இரண்டு இதழ்கள் மட்டுமே கிடைத்தன. ஆகவே இடைப்பட்ட இதழ்களையும், முந்தின இதழ்களையும் அனுப்பித் தாருங்கள். உங்களுக்கு உதவி செய்ய ஆண்ட

ஏற்ற வேளையைத் தர ஜெபிக்கிறேன். கர்த்தர் தாமே தங்களது
த்துக் காரியங்களையும் வாய்க்கச் செய்வாராக.

Bro V. ஆல்பர்ட் (தாராபுரம்)

ஸ்துவுக்குள் அன்பான பாஸ்டர் அவர்களுக்கு,

தங்களுடைய பத்திரிக்கையைப் படிக்க நேர்ந்தது. அதில் வேதா த்தை அறிந்துகொள்ளுங்கள் என்ற பகுதி ஊழியர்களுக்கு மிகவும் யோஜனமான பகுதி அது மிக உன்னதமான பகுதி. என்னுடைய ழியங்களுக்கு மிகவும் பிரயோஜனமாயுள்ளது ஆகவே ஆதியாகமம் கொண்டு துவக்கியுள்ள தங்கள் பத்திரிக்கையை அனுப்ப வேண்டு றன் உங்களுக்காய், ஊழியங்களுக்காய் ஜெபிக்கிறேன். எனக்காக ழியங்களுக்காக ஜெபியுங்கள்.

பாஸ்டர் V. S. ராஜா (கிண்ணத்துக்கடவு)

த்தருக்குள் அன்பான சகோதாருக்கு,

கூடார எதிரொலி பத்திரிக்கைகளைத் தவருது அனுப்பி வையுங்கள். ல் குறிப்பாக வேத பாடம் ஆபிரகாமின் வாழ்க்கை வரலாறு தெவிட் தெள்ளமுது. கருத்துச் செறிந்த அந்தப் பகுதியை பலமுறை படித்து டேன். அந்தக் குறிப்பிட்ட பகுதியை இன்னும் சற்று விரிவுபடுத் லும் நல்லது தான். சாதாரணமாக எல்லாப் பத்திரிக்கைகளிலும் திகள் உண்டு. இப்படிப்பட்ட பிரயோஜனமான பகுதிக்காக ஆண் க்கு ஸ்தோத்திரம். எக்காரணம் கொண்டும் இப்பகுதியை நிறுத்தி வேண்டாம் இதைப் படிப்போர் உள்ளங்களில் ஆவியானவர் இன்ன தீவிரமாய் கிரியை செய்வாராக. இப்பெரும் பணியில் ஈடுபட்டுள்ள களை அவர்தாமே ஆசீர்வதிப்பாராக.

Bro. தாமஸ் கோயில்பிள்ளை (குன்னூர்)

த்தருக்குள் அன்பான ஐயா அவர்களுக்கு,

தொடர்ந்து 3 வருடமாய் தங்களது பத்திரிக்கையை வாசித்து பய டைந்து வருகிறேன். அதிலும் தாங்கள் சமீபத்தில் ஆரம்பித்துள்ள ரகாமின் வாழ்க்கை வரலாறு என்ற வேத பகுதி பிரயோஜனமாய் மல்ல, ஜீவியத்திலுள்ள குறைகளையும் சுட்டிக்காட்டி உணர்த்துகிறது. த வேதபாடங்கள் அனைத்தையும் பத்திரமாய் சேகரித்து வருகிறேன். த வேதபாடம் முடிந்ததும் அப்படியே ஆபிரகாமின் வாழ்க்கை வர று என்ற தலைப்பில் புஸ்தகமாய் வெளியிடுங்கள். என்னைப்போல் நகர் இதை விரும்பி உங்களுக்குக் கடிதம் எழுதி புத்தகமாய் வெளி ஏற்ற உதவியை நிச்சயம் செய்வார்கள். கர்த்தர் நிச்சயம் உங்கள் வைகளைச் சந்திப்பார். புத்தகம் வெளி வரும் நாளை ஆவலுடன் பார்க்கிறேன்.

சகோ. D. சார்லஸ் (திண்டுக்கல்)

PRINTED MATTER

To E10. Mr. J. Emmanuel Devadason (Clerk

State bank of India.

Tirunelveli.

Return Requested :
Pastor : **D. Packiaraj.**
Maranatha Church,
Thenkarai, Periyakulam-626501,
South India.